**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**
**<u>அசல் வழக்கு எண். 161/2020</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. மோகன், Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 11–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். செல்வராஜ் (PW1)<br>வயது. | நாள்.11.07.2023 |
| த/பெ. பாலகிருஷ்ணன் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. தாவாசொத்துக்களுடன் சேர்த்து மொத்தம் 24 செண்டுகள் ஆதியில் ஏகாம்பரம் முதலியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

2. சர்வே எண். 217/9A ல் மொத்தம் 7 செண்ட் என்றால் சரியல்ல. 6 செண்ட் தான் உள்ளது. நான் எனது வழக்கில் மேற்சொன்ன சர்வே எண்ணில் 7 செண்ட் என் எனது வழக்குறையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வழக்குறையில் உள்ள சொத்து விவரத்தில் 6 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.217/11 ல் மொத்தம் 11 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண். 217/12 ல் மொத்தம் 6 செண்ட் என்றால் சரிதான். ஏகாம்பரம் முதலியாருக்கு மொத்தம் 6 பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்கள் பூமியப்ப முதலியார், வேலாயுதம் முதலியார், கோவிந்தராஜன் முதலியார், மண்ணபெருமாள் முதலியார் என்றால் சரிதான். இவர்களில் கோவிந்தராஜன் முதலியார் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4. ஏகாம்பரம் முதலியாரின் மகன்களாகிய மற்ற மூன்று நபர்களுக்கு மொத்த விஸ்தீரணமான 24 செண்டில் தலா 8 செண்ட் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

5. எனது வழக்குறையில் 50 வருடங்களுக்கு முன்பாக ஏகாம்பர முதலியாரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அந்த விவரத்தை எனக்கு எனது தந்தை சொல்லியுள்ளார். எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**6.** யார் யார் எவ்வளவு பாகம் பிரித்து கொண்டார்கள் என்றோ யார் முதலில் பிரித்து கொண்டார்கள் என்றோ எந்த வருடம் யார் முன்னிலையில் பிரித்து கொண்டார்கள் என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**7.** வழக்குறையில் மண்ணை பெருமாளுக்கும், கோவிந்தராஜன் முதலியாருக்கும் வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மண்ணபெருமாளின் பிள்ளைகள் அந்த விவரங்களை என்னிடம் சொன்னார்கள்.

**8.** வா.சா.ஆ.1 ல் எனது வழக்குறையில் சொல்லியுள்ளபடி ஏகாம்பர முதலியார் வாரிசுகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்ட விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**9.** வா.சா.ஆ.1 ன் படி தாவா சர்வே எண்ணில் 3 செண்ட் மற்றும் எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் ஏற்கனவே அதற்கு முன்பாக மற்ற இடங்களை கோவிந்தாராஜ் முதலியாரிடம் இருந்து வாய்மொழியாக கிரையம் பெற்றுவிட்டார்.

**10.** எந்த தேதி, மாதம் வருடத்தில் எனது தந்தை கோவிந்தராஜ் முதலியாரிடம் இருந்து வாய்மொழியாக கிரையம் பெற்றார் என்றால் தேதி சரியாக தெரியாது. கிரையம் பெற்ற விவரத்தை மட்டும் எனது தகப்பனார் என்னிடம் சொன்னார்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur